**த. நா.ச.பே. எண் : 007** **நாள் : 30.03.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று **(30.3.2015)** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவ மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டு வரும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் குறித்து ஆற்றிய உரை:-

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவ மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு எவ்வாறெல்லாம் செவ்வனே செயல்படுத்தி வருகிறது என்பதைப் பற்றி சில விளக்கங்களை இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றுள் முதன்மையானது போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டமாகும்.

**2. 2010–2011** ஆம் ஆண்டு வரை அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு பராமரிப்பு படி மற்றும் கல்விக் கட்டணங்கள் அரசால் வழங்கப்பட்டு வந்தன. சுய நிதிக் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு அரசு /அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் கல்வி கட்டண அளவிலே மட்டும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது.

**3.** பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்களின் உயர் கல்வி விகிதத்தினை உயர்த்தும் உன்னத நோக்கோடு அரசாணை (நிலை) எண்.6, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் **6.1.2012**–இல் வெளியிடப்பட்டது. அவ்வரசாணையின்படி சுய நிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு **“அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு”** நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் **2011–2012** ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணையிட்டது.

**4.** போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தினை சுய நிதிக் கல்லூரிகளுக்கும் நீட்டித்து ஆணையிடப்பட்டப்பின்பு இத்திட்டத்திற்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வருடம்** | **மொத்த பயனாளிகள் எண்ணிக்கை** | **மொத்த செலவினம் ரூ. கோடியில்** |
|---|---|---|
| **2012–13** | 672257 | 374.83 |
| **2013–14** | 682014 | 882.68 |
| **2014–15** (நாளது தேதி வரை செலவினம்) | 573523 | 534.58 |

**5.** 2014-2015 ஆம் கல்வியாண்டிற்கு ரூ.676 கோடி 2014-2015 ஆம் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 2013-14 ஆம் கல்வியாண்டிற்கு வழங்க வேண்டிய பராமரிப்புப்படி மற்றும் கல்விக் கட்டணங்கள் நிலுவைத் தொகை மற்றும் 2014-**2015** ஆம் கல்வியாண்டிற்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு பராமரிப்புபடி மற்றும் கல்விக்கட்டணம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சுய நிதிக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணர்க்கர்களுக்கும் பராமரிப்புப் படி மற்றும் கல்விக்கட்டணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

**<u>இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரங்கள்</u>**

- அரசாணை (நிலை) எண். **92**, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் **11.9.2012–**ன்படி திட்டத்தினை திறம்பட செயல்படுத்த தேவையான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

- அரசாணை (நிலை) எண்.**28**, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் **29.4.2013–**ன்படி **2013–2014** கல்வியாண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டப் பயனை மாணாக்கர்கள் /கல்வி நிலையங்களில் சேமிப்பு கணக்கு மூலம் பட்டுவாடா செய்யும் பொருட்டு சேமிப்பு கணக்கு துவக்குவது கட்டாயமாக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தினைக் கண்காணிக்க இரண்டாம் நிலை அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழுவினை நியமித்து தொடர்ச்சியான கண்காணிப்பில் இத்திட்டத்தினை செயல்படுத்த இணை இயக்குநர் தலைமையில் மாநில அளவிலான கண்காணிப்புக்குழு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

- அரசாணை (நிலை) எண்.44, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 15.7.2014–ன்படி இத்திட்டத்தினை கண்காணிக்க மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு அமைத்து அதன் பணிகளை நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

- 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் பொறியியல் , மருத்துவம் படிப்பிற்கான கலந்தாய்வின்போது (Counselling) இத்திட்டத்தினை பற்றிய விழிப்புணர்வை மாணாக்கர்களிடம் ஏற்படுத்தும் வண்ணம் கலந்தாய்வு நடைபெறும் இடங்களில் இத்துறையின் சார்பாக இரண்டு சிறப்பு தாசில்தார்கள் அடங்கிய அரங்கு அமைக்கப்பட்டு துண்டு பிரசுரங்கள் விநியோயிக்கப்படுகிறது. மேலும் கலந்தாய்வில் கலந்து கொண்டு கல்லூரிகளில் ஒதுக்கீட்டு ஆணை பெறும் தகுதியுள்ள மாணாக்கர்களிடம் கல்விக் கட்டணங்கள் வசூலிக்கக் கூடாது என்றும் அத்தொகையினை இத்துறை செலுத்தும் என்றும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

- அனைத்து கல்வித் துறை இயக்கக தலைவர்களுக்கும் இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு கல்வியாண்டும் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யும்பொழுது அதனை பற்றிய விவரங்களை மாணாக்கர்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் முன்னணி செய்தித்தாள்களில் இத்துறை மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது.

- 2013–2014 ஆம் கல்வியாண்டு நிலுவைத் தொகை ரூ.320 கோடியினை வழங்கும்போது அனைத்து கல்லூரி நிர்வாகங்களையும் நேரடியாக இயக்குநர், ஆதி திராவிடர் நல அலுவலகத்திற்கு வரவழைத்து இணைய தளத்தில் கல்லூரிகள் விண்ணப்பித்த மாணாக்கர்களின் விவரம், அசல் சாதிச் சான்று , வருமானச் சான்று, கல்லூரி அரசிடம் பெற்ற அங்கீகார விவரம் போன்றவற்றினை நேரடியாக சரிபார்த்த பின்பு மாணாக்கர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகங்களுக்கு கல்வி உதவித் தொகை மின்னணுத்தீர்வை (ECS) முறையில் வழங்கப்பட்டது.

6. போஸ்ட் மெட்ரிக் கல்வி தொகைத் திட்டத்தின் கீழ் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழில்நுட்பப் படிப்புப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கை வருடந்தோறும் அதிகரித்துள்ளது.

மாதிரிக்கு பொறியியல் படிப்புப் பிரிவில் வருடவாரியான சேர்க்கை விவரங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | ஆதிதிராவிடர் | பழங்குடியினர் | மொத்தம் |
|---|---|---|---|
| 2012–13 | 22,264 | 468 | 22,732 |
| 2013–14 | 27,417 | 718 | 28,135 |
| 2014–15 | 29,740 | 863 | 30,603 |

இதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவர்கள் அதிகளவில் பயன் பெற்றுள்ளார்கள் என்பது தான் உண்மையான நிலை என்பதை இங்கே நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதை மேற்காண் அட்டவணையில் நாம் தெளிவாகக் காணலாம். மேலும் மேற்காண் திட்டத்தின் பலனாக கலை, அறிவியல் படிப்புப் பிரிவுகளை விடுத்து பொறியியல், மருத்துவம், மருத்துவம் சார் படிப்புக்கள், பல்தொழில்நுட்பப் படிப்புக்கள் உள்ளிட்ட வேலைவாய்ப்பு அதிகமுள்ள தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளை ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இன மாணாக்கர்கள் நாடுவதும் அதிகரித்துள்ளதும் இணைப்பில் அட்டவணையிடப்பட்டுள்ளது. தொழில்நுட்பப் படிப்பு பிரிவுகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணாக்கர்கள் நாடுவதே இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதற்கு சான்றாகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

********

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**